ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021.12.16 |


# மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி[1] (மா.மொ.உ.உ)- 2020

## கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரவலுக்கு மத்தியில், மேல் மாகாணம் பொருளாதாரத்தின் உயிரோட்டத்தின் மையமாக தொடர்ந்தும் விளங்கிய அதேவேளை அதன் பங்கு வீழ்ச்சியடைந்து ஒட்டுமொத்த சுருக்கமடைதலுக்கும் பங்களிப்புச்செய்தது.

**முக்கிய அம்சங்கள்**


*பெயரளவிலான மொ.உ.உற்பத்தி – 2020*
*ரூ.14,973.0 பில்*

*மா.மொ.உ.உற்பத்தி பங்கு அதிகூடியது:*
*மேல் மாகாணம்*

நாட்டின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பாரிய பங்கினை (38.0 சதவீதம்) மேல் மாகாணம் தனதாக்கிக் கொண்டது. எனினும், நோய்த்தொற்று நிலைமையின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்ததன் விளைவாக அதன் பங்கு 2019 இலிருந்து 1.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மத்திய (11.3 சதவீதம்) மற்றும் வடமேல் (11.0 சதவீதம்) மாகாணங்கள் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் காணப்பட்டன.

வடமேல், தென், சப்பிரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களின் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்திப் பங்குகள் அதிகரித்த அதேவேளை மேல் மற்றும் வட மாகாணங்களில் ஆண்டிற்கு ஆண்டு பங்கு வீழ்ச்சிகள் அவதானிக்கப்படக்கூடியதாக இருந்தது.

வரைபடம் 1
மா.மொ.உ.உற்பத்தி பங்குகள் - 2020




அட்டவணை 1
மாகாண ரீதியான பெயரளவு மொ.உ.உற்பத்தி
(நடைமுறை சந்தை விலைகளில்)

| மாகாணம் | 2019அ | | 2020ஆ | |
|---|---|---|---|---|
| | பெறுமதி (ரூ.பில்.) | பங்கு (%) | பெறுமதி (ரூ.பில்.) | பெறுமதி (ரூ.பில்.) |
| மேல் | 5,857.8 | 39.0 | 5,694.3 | 38.0 |
| மத்திய | 1,694.6 | 11.3 | 1,692.1 | 11.3 |
| வட மேல் | 1,639.6 | 10.9 | 1,653.1 | 11.0 |
| தென் | 1,491.4 | 9.9 | 1,518.0 | 10.1 |
| சப்பிரகமுவ | 1,131.1 | 7.5 | 1,188.2 | 7.9 |
| வட மத்திய | 823.3 | 5.5 | 876.3 | 5.9 |
| கிழக்கு | 854.1 | 5.7 | 849.4 | 5.7 |
| ஊவா | 803.5 | 5.4 | 812.1 | 5.4 |
| வட | 717.6 | 4.8 | 689.4 | 4.6 |
| **இலங்கை** | **15,013.0** | **100.0** | **14,973.0** | **100.0** |

அ. திருத்தப்பட்டது ஆ. தற்காலிகமானது

### நடவடிக்கை ரீதியான செயலாற்றும்

**பொருளாதார நடவடிக்கைகளுக்கான மாகாண ரீதியான பங்களிப்பு**


வேளாண்மை நடவடிக்கைகளின் நியதிகளில் அனைத்து மாகாணங்களும் 7.7 சதவீதத்திலிருந்து 17.6 சதவீத வீச்சில் சீராகப் பங்களித்துள்ள அதேவேளை வட மேல், தென் மற்றும் மத்திய மாகாணங்கள் நாட்டின் வேளாண்மை நடவடிக்கைகளுக்கு முன்னணியாக பங்களித்த மாகாணங்களாக விளங்கின (வரைபடம் 2).

மேல் மாகாணம், 44.6 சதவீதம் கொண்ட பங்களிப்புடன் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்திய அதேவேளை மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் உயர்வாகப் பங்களித்திருந்தன.

பணிகள் நடவடிக்கைகளின் நியதிகளில் மேல் மாகாணமானது 39.3 சதவீதம் கொண்ட அதிகூடிய பங்களிப்பினைப் பதிவுசெய்த அதேவேளை மத்திய மற்றும் தென் மாகாணங்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் உயர்வாகப் பங்களித்திருந்தன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சப்பிரகமுவ மாகாணம் மாத்திரம் மூன்று நடவடிக்கைகளிலும் அதன் பங்குகளை அதிகரித்துள்ளது. மாறாக, மேல் மாகாணம் அனைத்து நடவடிக்கைகளினதும் பங்குகள் முன்னைய ஆண்டைவிட வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளை ஏனைய மாகாணங்கள் கலந்த செயலாற்றமொன்றினைக் காண்பித்துள்ளன. (அட்டவணை 2).

வரைபடம் 2
மாகாணங்களின் நடவடிக்கை ரீதியான செயலாற்றம் (%) - 2020




அட்டவணை 2
மா.மொ.உ.உற்பத்தியின் துறைவாரியான உள்ளமைப்பு- 2019 மற்றும் 2020

| மாகாணம் | வேளாண்மை(%) | | கைத்தொழில்(%) | | பணிகள்(%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 |
| மேல் | 9.6 | 8.1 | 45.6 | 44.6 | 39.7 | 39.3 |
| மத்திய | 10.8 | 12.0 | 11.3 | 11.4 | 11.3 | 11.1 |
| தென் | 15.9 | 14.3 | 6.9 | 7.7 | 10.6 | 10.6 |
| வட | 9.8 | 8.8 | 5.2 | 4.8 | 3.9 | 3.9 |
| கிழக்கு | 10.5 | 10.2 | 4.7 | 4.4 | 5.5 | 5.6 |
| வட மேல் | 17.2 | 17.6 | 9.9 | 10.3 | 10.6 | 10.5 |
| வட மத்திய | 9.0 | 11.9 | 3.5 | 3.4 | 6.0 | 6.1 |
| ஊவா | 9.5 | 9.6 | 5.2 | 5.0 | 4.9 | 5.1 |
| சப்பிரகமுவ | 7.7 | 7.7 | 7.6 | 8.5 | 7.5 | 7.7 |
| **இலங்கை** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

[1] மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை கூறுகளாக வேறுபடுத்துவதன் மூலம் மேலிருந்து கீழ் அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டு வருகின்றது. மாகாணங்களுக்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியினை மதிப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் ஒவ்வொரு துறை விடயத்தினதும் பெறுமதியானது மாகாண மட்டத்தில் தொடர்புடைய குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பங்கீடு செய்யப்படுகின்றது.

**மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள்**

பணி நடவடிக்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 50 சதவீதத்திற்கும் மேல் பங்களிப்புச் செய்து அனைத்து மாகாணங்களிலும் ஆதிக்கம் செலுத்தின. அனைத்து மாகாணங்களிலும் கைத்தொழில் நடவடிக்கைகள் 15.1 சதவீதத்திலிருந்து 30.8 சதவீதம் வரையான வீச்சில் பணிகள் நடவடிக்கைக்கு அடுத்ததாக நிலைபெற்றுள்ள அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகள் மாகாணங்கள் முழுவதும் 1.8 சதவீதத்திலிருந்து 17.0 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன (வரைபடம் 3).

வரைபடம் 3
மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள் - 2020

